**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 432/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. திவ்யா |
| Father's Name/Husband Name: | திரு. குமார் |
| Village : | பரவாய் |
| Taluk : | குன்னம் |
| Age : | 31/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.04.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 6, 10, 11 ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது பரவாய் கிராமத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஆஜர் எதிரிகளுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது சிலர் என்னை அடித்து காயப்படுத்திவிட்டார்கள். எதிரிகளின் மீது சந்தேகத்தின் பேரில் புகார் கொடுத்துவிட்டேன். எதிரிகள் என்னை யாரும் அடிக்கவில்லை. நான் **கொடுத்த தனிக்குற்ற புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 10.08.2021ம் தேதி காலை 4 மணியளவில் ஆஜர் எதிரிகள் என்னுடைய வீட்டிற்குள் அத்து மீறி உள்ளே நுழைந்து ஆயுதங்களை எடுத்துக் கொண்டு என்னை

இழுத்துக் கொண்டு வெளியே வந்து அங்கிருந்த கம்பத்தில் இரண்டு கைகளையும் பின்புறமாக வைத்து கருப்பு நைலான் கயிறால் கட்டி என்னை கெட்டவார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் சரியல்ல. எதிரி செல்லம்மாள் என்னை கெட்ட வார்த்தையால் திட்டி கொலை மிரட்டல் விடுத்ததாகவும் எதிரிகள் சத்தியமூர்த்தி, தனபால், ரஞ்சித் மூன்று பேரும் என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் நான் அளித்த தனிப்புகாரில் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எதிரிகளுடன் சமரசமாக சென்றுவிட்டேன் என்றால் சரிதான். நான் எதிரிகளுக்காக பரிந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.